தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 5, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 ஏப்ரல் 18, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.”

உரிய கருவி, உற்ற காலம், ஆற்றும் வகை, ஆற்றிடும் பணி ஆகியவற்றை ஆய்ந்தறிந்து செயல்படுபவனே சிறந்த அமைச்சன்.

1. இரங்கல் தீர்மானம்

இளம் டேபிள் டென்னிஸ் வீரர் செல்வன் விஸ்வா தீனதயாளன் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இளம் டேபிள் டென்னிஸ் வீரர் செல்வன் விஸ்வா தீனதயாளன், மேகாலயா மாநிலம், ஷில்லாங்கில் நடைபெறவுள்ள 83-வது முதுநிலை தேசிய சேம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொள்வதற்காக, சக போட்டியாளர்களுடன் சென்றபோது, நேற்று (17—4—2022) சாலை விபத்தில் படுகாயமுற்று மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்த செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும்கொள்கிறது.*

பதினெட்டு வயதான செல்வன் விஸ்வா தீனதயாளன், மாநில மற்றும் தேசிய அளவிலான டேபிள் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்று பல்வேறு விருதுகளைப் பெற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

இளம் விளையாட்டு வீரரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவரது நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இளம் வீரருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர் அவர்கள். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

113—

தெரு விளக்குகள்

***2782—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 38 முதல் 43 வரை மற்றும் 47 ஆகிய வார்டுகளில் உள்ள தெரு விளக்குகளை மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, ஆர்.கே. நகர் தொகுதியில் 69 எண்ணிக்கையில் துருப்பிடித்த பழைய தெரு விளக்கு மின்கம்பங்களை மாற்றி, புதிய 7 மீட்டர் உயர மின்கம்பங்கள் அமைக்கவும், 1,584 மீட்டர் பழுதடைந்த 2 கோர் கேபிள்களை மாற்றி புதிய கேபிள்கள் அமைக்கவும், 188 எண்ணிக்கையில் பழுதடைந்த 4 கோர் பியூஸ் பாக்ஸ்களை